மாணவர்

புள்ளிவிபரவியற்

கைநூல்

வரைவிலக்கணங்களும்
புள்ளிவிபர அட்டவணைகளும்



பாலசிங்கம் பத்மநாதன்

மாணவர்

புள்ளிவிபரவியற்

கைநூல்

பா. பத்மநாபன் B. A., Dip. in Maths.

உதவி விரிவுரையாளர்,

இலங்கைப் பல்கலைக்கழகம்,

பேராதனை வளாகம்.

வரைவிலக்கணங்களும்

புள்ளிவிபர அட்டவணைகளும்

STATISTICS

Definitions &
Statistical tables.

B. PATHMANAPAN B. A., Dip. in Maths.

Asst. Lecturer,
Dept. of Economics, Political Science,
Commerce & Statistics
University of Sri Lanka,
Peradeniya Campus

First Edition: September 1977
Printers : Bastian Press, Jaffna.
Art : S. Shanmuganathan
Price : 5-50

பொருளடக்கம்

*குறியீடுகள் சில

$\bar{X}$	–	X சலாகை (X Bar)
Σ	–	கூட்டுத்தொகை — சிக்மா
$\cup$	–	ஒன்றிப்பு
$\cap$	–	இடைவெட்டு
$\supset, \subset$	–	உள்ளடக்கம்
ϕ	–	பைய் (Phi)
α	–	அல்பா (Alpha)
β	–	பீற்ரு (Beta)
γ	–	காமா (Gamma)
θ	–	தீற்ரு (Theta)
λ	–	லம்டா (Lambda)
μ	–	மியூ (Mu)
π	–	பை (Pi)
σ	–	சிக்மா (Sigma)
ρ	–	ரோ (Rho)
ν	–	நியூ (Nu)
χ	–	கைய் (Chi)
$\sim$	–	பரம்பப்பட்டுள்ளது
$X<Y$	–	X சிறிது Y
$X>Y$	–	X பெரிது Y
$X\leqslant Y$	–	X சிறிது அல்லது சமன் Y
$X\geqslant Y$	–	X பெரிது அல்லது சமன் Y

*இந்நூலில் எடுத்தாளப்பட்ட குறியீடுகளுக்கான விளக்கம்

வரைவிலக்கணங்கள் (DEFINITIONS)

1: புள்ளிவிபரவியல் (Statistics)

புள்ளிவிபரவியல் என்பது தரவுகளைத் திரட்டி ஒழுங்கு படுத்தித் தொகுத்து, பின்னர் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிபுகளைப் பெற்று அம் முடிபுகளிலிருந்து பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள உதவும் விஞ்ஞான முறையாகும்.

2: விவரணப் புள்ளிவிபரவியல் (Descriptive Statistics)

தரப்பட்ட தொகுதித் தரவுகளைமட்டும் விபரித்துப் பகுக்கும் புள்ளிவிபரவியற் பகுதி விவரணப் புள்ளிவிபரவியல் அல்லது உய்த்தறி புள்ளிவிபரவியல் எனப்படும். அதாவது இப்பகுதியானது தரவுகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றன என்பதையும், பின்னர் அவை மீடிறன் பரம்பல்களாக உணர்த்தப்பட்டு அவற்றிலிருந்து தரப்பட்ட தரவுகள் பற்றிய முடிபுகள் எவ்வாறு பெறப்பகின்றன என்பதனையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2.1: மாறி (Variable)

ஒரு கூட்டத்திலிருக்கும் ஓர் உறுப்பின் தன்மை ஏனைய உறுப்புக்களின் தன்மையினின்றும் கணியத்திலோ பண்பிலோ எவ்வாறு வேறுபடுகின்றதென்பதைக் காட்டும் சிறப்புக்கூறு மாறி எனப்படும்.

பொதுவாக ஒரு மாறியானது பின்கை மாறியாகவோ அன்றித் தொடர் மாறியாகவோ காணப்படலாம்.

மாறியொன்று குறிப்பிட்ட தனியாக்கிய பெறுமானங்களை மட்டுமே எடுப்பின் அது **பின்னக மாறி**யெனவும், குறிப்பிட்ட ஆயிடையிலுள்ள எப்பெறுமானங்களையும் எடுப்பின் அது **தொடர் மாறி**யெனவும் அழைக்கப்படும்.

2.2: மீடிறன் பரம்பல் (Frequency Distribution)

ஒரு தொகுதித் தரவுகள் வகுப்புகளாக வகுப்பாக்கப்பட்டு, ஒவ்வொரு வகுப்பிற்குமுரிய மீடிறன்கள் அவதானிக்கப்படுகின்றதென்க. இவ்வாறு வகுப்பாக்கப்பட்ட வகுப்புகளை அவற்றுக்கொத்த மீடிறன்களுடன் கொண்ட ஓர் அட்டவணை, மீடிறன் பரம்பல் அட்டவணை அல்லது மீடிறன் பரம்பல் எனப்படும்.

2.3: இடங்காணல் அளவைகள் (Measures of Location)

(அ) கூட்டலிடை (Arithmetic Mean)

மாறியொன்றின் கூட்டலிடையானது, மாறியேற்கும் மதிப்புகளெல்லாவற்றினதும் கூட்டுத்தொகையை மதிப்புகளின் மொத்த எண்ணிக்கையால் பிரிக்க வருவதேயாகும்.

X என்னுமொரு மாறியானது $x_1, x_2, \ldots\ldots, x_n$ என்னும் n பெறுமானங்களை எடுப்பின்,

$$\bar{X} = \frac{x_1 + x_2 + \ldots\ldots + x_n}{n}$$

$$= \frac{\sum x}{n} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (1)$$

X என்னும் மாறியானத்து $x_1, x_2, \ldots\ldots, x_n$ என்னும் பெறுமானங்களை முறையே $f_1, f_2, \ldots\ \ldots, f_n$ என்னும் ஒத்த மீடிறன்களுடன் எடுப்பின்,

$$\bar{X} = \frac{\sum fx}{N} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (2)$$

இங்கு $N = \sum f$

உத்தேசித்த இடையாக a பயன்படுத்தப்படின்,

$$\bar{X} = a + \frac{\sum fd}{N} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (3)$$

இங்கு $d = x - a$

அத்துடன் வகுப்பாயிடையளவுகள் c என்னும் எண்ணிறுற் பிரி படக் கூடியனவாயின்,

$$\bar{X} = a + c\,\frac{\sum fx}{N} \qquad \text{............... (4)}$$

இங்கு $u = \dfrac{x - a}{c}$

(ஆ) பெருக்கலிடை (Geometric Mean)

X என்னுமொரு மாறியானது $x_1, x_2, \ldots\ldots, x_n$ என்னும் n பெறு மானங்களை எடுப்பின்,

$$G = \sqrt[n]{x_1 \times x_2 \times \ldots\ldots \times x_n} \qquad \text{............... (5)}$$

X என்னும் மாறியானது $x_1, x_2, \ldots\ldots, x_n$ என்னும் பெறுமானங் களை முறையே $f_1, f_2, \ldots\ldots\ldots, f_n$ என்னும் ஒத்த மீடிறன்களுடன் எடுப்பின்,

$$G = \left(x_1^{f_1} \times x_2^{f_2} \times \ldots\ldots \times x_n^{f_n}\right)^{\frac{1}{N}} \text{...............(6)}$$

(இ) இடையம் (Median)

மீடிறன் பரம்பலொன்றை இரு சம பங்காகப் பிரிக்கும் மாறியின் பெறுமானம் அப்பரம்பலின் இடையம் எனப் படும்.

$$\text{இடையம்} = l + \frac{\left(\frac{N}{2} - m\right)h}{f} \qquad \text{............... (7)}$$

(ஈ) காலணைகள் (Quartiles)

மீடிறன் பரம்பலொன்றை நான்கு சம பங்காகப் பிரிக் கும் மாறியின் பெறுமானங்கள் அப்பரம்பலின் காலணை கள் (Q_i) எனப்படும்.

$$Q_i = l + \frac{\left(\frac{iN}{4} - m\right)h}{f} \qquad \text{.............. (8)}$$

$$i = 1,\ 2,\ 3$$

(உ) தசவீதத்திகள் (Deciles)

மீடிறன் பரம்பலொன்றை பத்து சமபங்குகளாகப் பிரிக்கும் மாறியின் பெறுமானங்கள் அப்பரம்பலின் தசவீதத்திகள் (D_i) எனப்படும்.

$$D_i = l + \frac{\left(\frac{iN}{10} - m\right)h}{f} \qquad \text{.............. (9)}$$

$$i = 1,\ 2,\ \ldots\ 9$$

(ஊ) சதமணைகள் (Percentiles)

மீடிறன் பரம்பலொன்றை நூறு சமபங்குகளாகப் பிரிக்கும் மாறியின் பெறுமானங்கள் அப்பரம்பலின் சதமணைகள் (P_i) எனப்படும்.

$$P_i = l + \frac{\left(\frac{iN}{100} - m\right)h}{f} \qquad \text{.............. (10)}$$

$$i = 1,\ 2,\ \ldots\ldots,\ 99$$

m — குறிப்பிட்ட வகுப்பிற்கு மேலுள்ள வகுப்பு வரையுள்ள திரட்டு மீடிறன்

l — குறிப்பிட்ட வகுப்பின் கீழெல்லை

f — குறிப்பிட்ட வகுப்பு மீடிறன்

h — குறிப்பிட்ட வகுப்பின் வகுப்பாயிடையளவு

(எ) ஆகாரம் (Mode)

மீடிறன் பரம்பலொன்றில் உயர்வு மீடிறனுக்கொத்த மாறியின் பெறுமானம் அப்பரம்பலின் ஆகாரம் எனப்படும்.

$$\text{ஆகாரம்} = l + \left(\frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \right) h \quad \ldots\ldots\ldots\ldots\ (11)$$

f_m — உயர்வு மீடிறன்

f_1 — ஆகார வகுப்பிற்கு முன்னுள்ள வகுப்பு மீடிறன்

f_2 — ஆகார வகுப்பிற்கு பின்னுள்ள வகுப்பு மீடிறன்

எந்த ஒரு மீடிறன் பரம்பலுக்கும்,

(இடை — ஆகாரம்) = 3 (இடை — இடையம்)

சமச்சீர்ப் பரம்பல்களுக்கு

இடை = இடையம் = ஆகாரம்

2.4: பிரிகை அளவைகள் (Measures of Dispersion)

(அ) வீச்சு (Range)

தரப்பட்ட பச்சை எண் தரவுகளை பந்தி உருவில் ஒழுங்குபடுத்தின், அவ்வொழுங்கிலிருக்கும் மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்குமிடையேயுள்ள வித்தியாசம் தரவின் வீச்சு எனப்படும்.

(ஆ) இடை விலகல் (Mean deviation)

$$\text{இடை விலகல்} = \frac{\sum |x - \bar{X}|}{n} \quad \ldots\ldots\ldots\ldots\ (12)$$

(இ) நியமவிலகல் (Standard deviation)

மாறியொன்று ஏற்கும் மதிப்புகளினது இடையிலிருந்தான விலகல்களின் வர்க்கங்களுடைய கூட்டுத்தொகையின் சராசரி குறிப்பிட்ட மாறியின் நியமவிலகல் (σ) எனப் படும்.

மாறி X ஆனது $x_1, x_2, \ldots\ldots x_n$ என்ற n நோக்கங்களை எடுப்பின்,

$$\sigma = \sqrt{\frac{\sum (x - \bar{X})^2}{n}} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (13)$$

நேரடிக் கணித்தல்களுக்கு,

$$\sigma = \sqrt{\frac{\sum x^2}{n} - \left(\frac{\sum x}{n}\right)^2} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (14)$$

மாறி X ஆனது $x_1, x_2 \ldots\ldots x_n$ என்ற பெறுமானங்களை முறையே $f_1, f_2, \ldots\ldots, f_n$ என்னும் ஒத்த மீடிறன்களுடன் எடுப்பின்,

$$\sigma = \sqrt{\frac{\sum fx^2}{N} - \left(\frac{\sum fx}{N}\right)^2} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (15)$$

இங்கு $N = f_1 + f_2 + \ldots\ldots + f$

மாறி X இனது அளவின் தொடக்க நிலையை வலப்பக்கம் கிடைவீச்சு a (உத்தேசித்த இடை) ஆகவுள்ள புள்ளிக்கு மாற்றப்படின் $(D = X - a)$

$$\sigma = \sqrt{\frac{\sum fd^2}{N} - \left(\frac{\sum fd}{N}\right)^2} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (16)$$

இங்கு $d = x - a$

அத்துடன் அளவிடையும் $1/c$ மடங்காக மாற்றப்படின்

$$\sigma = c\sqrt{\frac{\sum fu^2}{N} - \left(\frac{\sum fu}{N}\right)^2} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (17)$$

இங்கு $u = \dfrac{x - a}{c}$

(ஈ) மாறற்றிறன் (Variance)

விலகல்களின் வர்க்கங்களுடைய கூட்டுத்தொகையின் சராசரி மாறற்றிறன் (σ^2) எனப்படும்.

$$\sigma^2 = \frac{\sum (x - \bar{X})^2}{n} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots (18)$$

(உ) தொடர்புப் பிரிகை (Relative dispersion)

$$\text{தொடர்புப் பிரிகை} = \frac{\text{தனியான விலகல்}}{\text{சராசரி}}$$

$$= \frac{x - \bar{X}}{\bar{X}} \quad \ldots\ldots\ldots\ldots\ldots (19)$$

(ஊ) மாறற் குணகம் (Coefficient of Variation)

$$V = \frac{\sigma}{\bar{X}} \quad \ldots\ldots\ldots\ldots\ldots (20)$$

2.5: ஓராய அளவைகள் (Measures of Skewness)

$$\text{ஓராயம்} = \frac{\text{இடை} - \text{ஆகாரம்}}{\text{நியமவிலகல்}} \quad \ldots\ldots\ldots\ldots\ldots (21)$$

3: நிகழ்தகவு (Probability)

அன்றாட வாழ்க்கையில் இயற்கையாக நிகழக்கூடிய பல எதிர் கால நிகழ்ச்சிகளின் விளைவுகள் அல்லது அவைபற்றி மனத்திலே தோன்றும் எண்ணங்கள், கருத்துக்கள் போன்றவற்றைப் போதுமான அளவு திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுதல் பகுத்தறிவிற்கு அப் பாற்பட்டதொன்றாகும். எனினும் பல நிலைமைகளில் எதிர்கால நிகழ்ச்சிகளின் விளைவுகள் அவை நேருவதற்கு முன்னமே வேண்டப் படுகின்றன. இவ்வாறு திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாத சந்தர்ப்பங்களிலேதான் நிகழ்தகவு பயன்படுத்தப்படுகிறது.

பொதுவாக, நிகழ்ச்சிகள் நிகழ்வதை ஓரளவிற்கு அளவிட்டு எண்ணளவில் கூறுவதே நிகழ்தகவு ஆகும்.

பழைய வரைவிலக்கணம்:

சமமாக நிகழக்கூடிய n நிகழ்ச்சிகளுள் நிகழ்ச்சி A ஆனது s முறை நேர்ந்தால் Aயின் நிகழ்தகவு,

$$P(A) = \frac{s}{n}$$

3.1: மாதிரி வெளி (Sample Space)

பரிசோதனை ஒன்றின் எல்லா இயல்தகு விளைவுகளின் தொடை அப்பரிசோதனையுடன் சேர்க்கப்படும் மாதிரிவெளி (S) எனப்படும்.

மாதிரி வெளியின் தொடைப்பிரிவு ஒன்று ஒரு நிகழ்ச்சி என்றும், மூலகம் ஒன்றை மாத்திரம் கொண்டுள்ள நிகழ்ச்சி ஆரம்ப நிகழ்ச்சி என்றும் அழைக்கப்படும்.

3.2: தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகள் (Mutually Exclusive Events)

S இலுள்ள இரு நிகழ்ச்சிகளுள் ஏதாவது ஒன்று நிகழும்போது மற்றைய நிகழ்ச்சி நிகழாவண்ணம் தடைப்படுமானால் அவ்விரு நிகழ்ச்சிகளும் தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளாகும்.



அதாவது, $A \cap B = \phi$ எனின் A, B தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளாகும்.

3.3: சாரா நிகழ்ச்சிகள் (Independent Events)

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுள் ஒரு நிகழ்ச்சி நேர்வது மற்றைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் நேர்வதை எவ்விதத்திலும் பாதிக்காமல் இருக்குமானால் அந்நிகழ்ச்சிகளெல்லாம் சாரா நிகழ்ச்சிகள் எனப்படும்.

கவனிக்க:

எனவே ஏதாவது இரு நிகழ்ச்சிகள் தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளாகவும், ஒன்றையொன்று சாராதவையாகவும் இருக்கமுடியாது.

3.4: நிகழ்தகவிற்கான நவீன வரைவிலக்கணம்

S என்பது ஒரு பரிசோதனை ε உடன் சேர்ந்த மாதிரி வெளி என்க. S இலுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சி A இற்கும் பின்வரும் வெளிப்படை உண்மைகளைத் திருப்தி செய்யுமாறு ஓர் எண் $P(A)$ வழங்கப்படுமானால் அவ்வெண், A இன் நிகழ்தகவு எனப்படும்.

வெளிப்படை உண்மைகள்:

(i) S இலுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சி A இற்கும் $O \leq \mathrm{P}(A) \leq 1$

(ii) $\mathrm{P}(S) = 1$

(iii) A, B என்பன S இலுள்ள தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளெனின்,

$$P(A \cup B) = \mathrm{P}(A) + \mathrm{P}(B)$$

(iv) $A_1, A_2, \ldots\ldots\ldots$ என்பன S இலுள்ள தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளின் தொடரிகளெனின்,

$$P(A_1 \cup A_2 \cup \ldots\ldots) = \mathrm{P}(A_1) + P(A_2) + \ldots\ldots\ldots$$

3.5: நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுபற்றிய தேற்றங்கள்

(i) $\mathrm{P}(\phi) = 0$

(ii) $\mathrm{P}(\bar{A}) = 1 - \mathrm{P}(A)$

(iii) $P(A) = P(A \cap B) + P(A \cap \bar{B})$

$$P(B) = P(A \cap B) + P(\bar{A} \cap B)$$

(iv) $P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$

(v) $$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C) - P(A \cap B) - P(B \cap C) - P(C \cap A) + P(A \cap B \cap C)$$

(vi) **நிகழ்தகவிற்கான கூட்டல் விதி**

A, B என்பன தம்முள் புறநீக்கும் இரு நிகழ்ச்சிகளெனின்

$$P(A \cup B) = P(A) + P(B)$$

அதேபோல A, B, C என்பன சோடியாய் தம்முள் புறநீக்குவனவெனின்

$$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C)$$

(vii) $A \subseteq B$ எனின் $P(A) \leq P(B)$

viii) $P(A \cap B) \leq P(A)$; $P(A \cup B) \geq P(A)$

$P(A \cap B) \leq P(B)$; $P(A \cup B) \geq P(B)$

(ix) **நிபந்தனை நிகழ்தகவு**

மாதிரிவெளி S இலுள்ள A, B என்னுமிரு நிகழ்ச்சிகளுள் நிகழ்ச்சி A நேர்ந்துவிட்டதெனத் தரப்பட $P(A) > 0$ ஆயிருக்க, B யினது நிபந்தனை நிகழ்தகவு,

$$P(B \mid A) = \frac{P(A \cap B)}{P(A)}$$ ஆகும்.

(x) $P(A \cap B) = P(A \mid B)P(B) = P(B \mid A)P(A)$

(xi) **கூட்டு நிகழ்தகவுத் தேற்றம்** *(Theorem on Total Probability)*

$B_1, B_2, \ldots\ldots, B_n$ என்பன மாதிரிவெளி S இன் ஒரு பிரிவினையைக் குறிப்பதாயும், A என்பது S இலுள்ள யாதேனும் ஒரு நிகழ்ச்சியும் எனின்,

$$P(A) = P(A \mid B_1)P(B_1) + P(A \mid B_2)P(B_2) + \ldots\ldots + P(A \mid B_n)P(B_n)$$



(xii) **பெயிசுவின் தேற்றம்** *(Baye's Theorem)*

$$P(B_i \mid A) = \frac{P(A \mid B_i)P(B_i)}{\sum P(A \mid B_i)P(B_i)}$$

இங்கு $B_i \cap B = \phi$, $\bigcup_{i=1}^{n} B_i = S$

(xiii) S இலுள்ள A, B என்னுமிரு நிகழ்ச்சிகளுள் நிகழ்ச்சி B யானது நேர்ந்துவிட்டதெனத் தரப்பட A இன் நிபந்தனை நிகழ்தகவானது, A இன் நிகழ்தகவிற்குச் சமனுயின் [$P(A \mid B) = P(A)$ எனின்] A யானது Bஐப் புள்ளியியலாகச் சாராதது எனப் படும்.

(xiv) **நிகழ்தகவிற்கான பெருக்கல் விதி**

A, B என்பன சாரா நிகழ்ச்சிகளெனின்

$$P(A \cap B) = P(A)P(B)$$

(xv) A, B, C என்பன சோடியாய்ச் சாரா நிகழ்ச்சிகளெனின்,

$$P(A \cap B) = P(A)P(B)$$

$$P(B \cap C) = P(B)P(C)$$

$$P(C \cap A) = P(C)P(A)$$

(xvi) A, B, C என்பன தம்முள்ச் சாரா நிகழ்ச்சிகளெனின் மேலுள்ள (xv) 3 நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனையும் தனித் தனியே திருப்தி செய்யப்படல் வேண்டும்.

$$P(A \cap B \cap C) = P(A)P(B)P(C)$$

4: எழுமாற்று மாறி (Random Variable)

பரிசோதனை ஒன்றின் முக்கியமான பகுதிகளை அளவிட்டுக் கூறுவதற்காகவே எழுமாற்று மாறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

ஒரு நிகழ்ச்சியினைக் குறிக்கும் மாறியினது திட்பமான பெறுமானத்தை அந்நிகழ்ச்சி நேருவதற்கு முன்பாக எதிர்வு கூறமுடியாவிடின் அம்மாறியை எழுமாற்று மாறி எனலாம்.

4.1: ஒரு பரிமாண எழுமாற்று மாறிகள் (One Dimensional Random Variables)

ε என்பது மாதிரிவெளி S உடன் சேர்க்கப்பட்ட யாதுமொரு பரிசோதனை என்க. ஒரு சார்பு X ஆனது, மாதிரிவெளி S இலுள்ள

ஒவ்வொரு மூலகம் e இற்கும் $X(e)$ என்னும் மெய்யெண்ணை வரையறுக்குமாயின் அவ்வெண் ஓர் **எழுமாற்று மாறி** எனப்படும்.

அதாவது, எழுமாற்று மாறியானது மாதிரிவெளி S மீது வரையறுக்கப்படும் ஒரு மெய்ப் பெறுமானச் சார்பு ஆகும்.



4.2: பின்னக எழுமாற்று மாறி (Discrete Random Variable)

X என்பது மாதிரிவெளி S இலுள்ள ஓர் எழுமாற்று மாறி என்க. X பெறக்கூடிய பெறுமானங்களின் எண்ணிக்கை (X இன் வீச்சு) முடிவான (*Finite*) தாயோ எண்ணத்தகுவன (*Denumerable*) வாயோ இருப்பின் X ஆனது பின்னக எழுமாற்று மாறி எனப்படும். அதாவது X ஆனது $x_1, x_2, \ldots\ldots, x_n, \ldots$ என்னும் பெறுமானங்களைப் பெறக்கூடியது.

நிகழ்தகவுச் சார்பு (Probability Function)

X என்பது மாதிரிவெளி S இலே வரையறுக்கப்படும் ஒரு பின்னக எழுமாற்று மாறி என்க. X இனது நிலைத்த பெறுமானம் x_i ஒவ்வொன்றிற்கும் ஓர் எண் $p(x_i) = P(X = x_i)$ சேர்க்கப்படுகின்றது.

எனின் $p(x_i); i = 1, 2 \ldots\ldots$ ஆனது பின்வரும் நிபந்தனைகளைத் திருத்தி செய்யும்:

(i) $p(x_i) \geq 0$ எல்லா i இற்கும்

(ii) $\sum_{i=1} p(x_i) = 1$

மேலே வரையறுக்கப்பட்ட சார்பு p ஆனது எழுமாற்று X இனது நிகழ்தகவுச் சார்பு எனப்படும்.

4.3: தொடர்ச்சியுள்ள எழுமாற்று மாறி (Continuous Random Variable)

ஓர் எழுமாற்று மாறி X ஆனது குறிப்பிட்ட ஆயிடையிலுள்ள எல்லாப் பெறுமானங்களையும் எடுக்கின்றதென்க. X எடுக்கக்கூடிய பெறுமானங்களெல்லாம் மாறிகளாகவும் (மாறிலி அல்லாதவை) X இனது i ஆவது பெறுமானத்தைப்பற்றி ஒன்றும் எதிர்வு கூறமுடியாதவாறு இருப்பின் X ஆனது தொடர்சியுள்ள எழுமாற்று மாறி எனப்படும்.

நிகழ்தகவு அடர்த்திச் சார்பு (Probability Density Function)

X என்பது மாதிரிவெளி S இலே வரையறுக்கப்படும் ஒரு தொடர்ச்சியுள்ள எழுமாற்று மாறி என்க. பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யுமாறு ஒரு சார்பு f பெறப்படின் அச்சார்பு நிகழ்தகவு அடர்த்திச் சார்பு எனப்படும்

(i) $f(x) \geq 0$ எல்லா x இற்கும்

(ii) $\int_{\infty}^{\infty} f(x)dx = 1$

(iii) $-\infty < a < x < b < \infty$ ஆகுமாறு ஏதாவது a, b இற்கு

$$P(a \leq X < b) = \int_a^b f(x)dx$$

கவனிக்க:

(i) $P(c < X < d)$ என்னும் நிகழ்தகவானது நிகழ்தகவு அடர்த்திச் சார்பு f இனைக்கொண்ட வளையியினாலும் $x = c, x = d$ என்னும் கோடுகளினாலும் உள்ளடக்கப்படும் பரப்பைக்குறிக்கும்.



(*ii*) $F(-\infty) = 0$, $F(\infty) = 1$

(*iii*) X ஆனது ஒரு தொடர்ச்சியுள்ள எழுமாற்று மாறியெனின் $F(x)$ ஆனது முதலாம் படிக்கு வகையிடத்தக்கது. அதாவது,

$$\frac{d}{dx}[F(x)] = f(x) \quad \text{(வகையீடு உளதாயிருக்கும்போது)}$$

(*iv*) X என்பது $x_1, x_2 \ldots\ldots x_n$ ...... என்னும் பெறுமானங்களை எடுக்கக்கூடிய ஒரு பின்னக எழுமாற்று மாறி எனின்



$$P(x_j) = P(X = x_j) = F(x_j) - F(x_{j-1})$$

4.4: இரு பரிமாண எழுமாற்று மாறிகள் (Two Dimensional Random Variables)

e என்பது மாதிரிவெளி S உடன் சேர்க்கப்பட்ட யாதுமொரு பரிசோதனை என்க. $X = X(e)$, $Y = Y(e)$ என்னுமிரு சார்புகள் ஒவ்வொன்றும் S இலுள்ள ஒவ்வொரு விளைவு e இற்கும் ஒரு மெய் யெண்ணை வழங்குமாயின் (X, Y) என்பது இரு பரிமாண எழுமாற்று மாறி எனப்படும்.



கூட்டு நிகழ்தகவுச் சார்பு (Joint Probability Function)

(X, Y) என்பது S இலே வரையறுக்கப்படும் ஒரு பின்னக இரு பரிமாண எழுமாற்று மாறி என்க. (X, Y) இன் ஒவ்வொரு இயல்

தகு விளைவு (x_i, y_i) இற்கும் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யுமாறு ஓர் எண் $p(x_i, y_j) = P(X = x_i, Y = y_j)$ ஐச் சேர்த்துக் கொள்க.

$$(i) \quad p(x_i, y_j) \geq 0 \quad \text{எல்லா } (x, y) \text{ இற்கும்}$$

$$(ii) \quad \sum_{i=1}^{\infty} \sum_{j=1}^{\infty} p(x_i, y_j) = 1$$

எனின், எல்லா (x_i, y_j) இற்கும் மேலே வரையறுக்கப்பட்ட சார்பு p ஆனது (X, Y) இனது கூட்டு நிகழ்தகவுச் சார்பு எனப்படும்.

கூட்டு நிகழ்தகவு அடர்த்திச் சார்பு (Joint Probability Density Function)

இரு பரிமாண வெளியிலுள்ள ஒரு தொடர்ச்சியுள்ள எழுமாற்று மாறி (X, Y) ஆனது குறிப்பிட்ட ஒரு தொகுதி R இலுள்ள எல்லாப் பெறுமானங்களையும் எடுக்கின்றதென்க. எனின் (X, Y) இனது கூட்டு நிகழ்தகவு அடர்த்திச் சார்பு f பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யும்.

$$(i) \quad f(x, y) \geq 0 \quad \text{எல்லா } (x, y) \in R \text{ இற்கும்}$$

$$(ii) \quad \iint_R f(x, y)\, dx\, dy = 1$$

4.5: ஓர நிகழ்தகவுப் பரம்பல் (Marginal Probability Disribution)

(i) பின்னக வகையில்:

எழுமாற்று மாறி X இனது ஓர நிகழ்தகவுப் பரம்பல் $p(x_i)$ ஆனது

$$p(x_i) = P(X = x_i) = \sum_{j=1}^{\infty} p(x_i, y_j) \quad \text{எனவும்}$$

எழுமாற்று மாறி Y இனது ஓர நிகழ்தகவுப் பரம்பல் $q(y_i)$ ஆனது,

$q(y_j) = \mathrm{P}(Y = y_j) = \sum_{i=1}^{\infty} p(x_i, y_j)$ எனவும் வரையறுக்கப்படும்.

(ii) தொடர்ச்சியுள்ள வகையில்:

எழுமாற்று மாறி X இனது ஓர நிகழ்தகவுப் பரம்பல் $g(x)$ ஆனது

$$g(x) = \int_{\infty}^{\infty} f(x, y)dy$$ எனவும்

எழுமாற்று மாறி Y இனது ஓர நிகழ்தகவுப் பரம்பல் $h(y)$ ஆனது

$$h(y) = \int_{\infty}^{\infty} f(x, y)dx$$ எனவும் வரையறுக்கப்படும்.

4.6: நிபந்தனை நிகழ்தகவுப் பரம்பல் (Conditional Probability Distribution)

(i) பின்னக வகையில்:

எழுமாற்று மாறி X இனது நிபந்தனை நிகழ்தகவுப் பரம்பல் $Y = y_j$ எனத்தரப்பட $p(x_i \mid y_j) = \mathrm{P}(X = x_i \mid Y = y_j)$ இனுல் குறிக்கப்பட்டு,

$$p(x_i \mid y_j) = \frac{p(x_i, y_j)}{q(y_j)}$$; இங்கு $q(y_j) > 0$, எனவும்

(ii) தொடர்ச்சியுள்ள வகையில்:

$g(x), h(y)$ என்பன முறையே X, Y இனது ஓர நிகழ்தகவு அடர்த்திச் சார்புகளெனின் எழுமாற்று மாறி X இனது நிபந்தனை நிகழ்தகவுப் பரம்பல் $Y = y$ எனத்தரப்பட,

$$g(x \mid y) = \frac{f(x, y)}{h(y)}$$ எனவும் வரையறுக்கப்படும்

இதேபோல y இற்கும் வரையறுக்கப்படலாம்.

4.7: சாரா எழுமாற்று மாறிகள் (Independent Random Variables)

எழுமாற்று மாறி X இனுடைய விளைவு, எழுமாற்று மாறி Y இனுடைய விளைவை எவ்விதத்திலும் பாதிக்காதெனின் X, Y என்பன சாரா எழுமாற்று மாறிகள் எனப்படும்.

(i) பின்னக வகையில்:

எல்லா i, j இற்கும் $p(x_i, y_j) = p(x_i)\, q(y_j)$ ஆயிருந்தால் மட்டுமே X, Y என்பன சாரா எழுமாற்று மாறிகள் எனப்படும்.

(ii) தொடர்ச்சியுள்ள வகையில்:

எல்லா x, y இற்கும் $f(x, y) = g(x)\, h(y)$ ஆயிருந்தால் மட்டுமே X, Y என்பன சாரா எழுமாற்று மாறிகள் எனப்படும்.

4.8: எழுமாற்று மாறியின் எதிர்பார்த்த பெறுமானம் (The Expected Value of a Random Variable)

எழுமாற்று மாறியொன்றின் எதிர்வு அல்லது எதிர்பார்த்த பெறுமானமானது நிகழ்தகவுகளின் சார்பில் வரையறுக்கப்படும் நிறையளிக்கப்பட்ட கூட்டலிடை என இலகுவாகக் கூறலாம்.

(i) பின்னக வகையில்:

எழுமாற்று மாறி X ஆனது பெறுமானங்கள் x_i; $i = 1, 2, \ldots$ என்பவற்றை ஒத்த நிகழ்தகவுகள் $p(x_i) = P(X = x_i)$ $i = 1, 2, \ldots$ உடன் எடுக்கின்றதென்க. எனின் $E(X)$ என்பதனால் குறிக்கப்படும் X இனது எதிர்பார்த்த பெறுமானம், $E(X) = \sum\limits_{i=1} x_i\, p(x_i)$ என்பதால் வரையறுக்கப்படும்.

இங்கு $\sum\limits_{i} p(x_i) = 1$ ஆயும், $\sum\limits_{i} x_i\, p(x_i)$ என்பது அற ஒருங்கும் தொடராயும் இருத்தல் அவசியம்.

(ii) தொடர்ச்சியுள்ள வகையில்:

நிகழ்தகவு அடர்த்திச் சார்பு f இனையுடைய எழுமாற்று மாறி X இனது எதிர்பார்த்த பெறுமானம்

3

$$E(X) = \int_{\infty}^{\infty} x\, f(x) dx$$ என வரையறுக்கப்படும்.

இங்கு $\int_{\infty}^{\infty} |x| \, f(x) \, dx$ முடிவாயிருப்பின் மட்டுமே

E (X) உளதாயிருக்கும்.

எதிர்பார்த்த பெறுமானத்தினது உடைமைகள்

(i) $E(c) = c$, இங்கு c ஓர் ஒருமை.

(ii) X என்பது ஓர் எழுமாற்று மாறியும், a, b, c ஒருமைகளுமெனின்,

$$E(cX) = cE(X)$$
$$E(aX + b) = aE(X) + b$$

(iii) X, Y என்பன யாதாயினும் ஈர் எழுமாற்று மாறிகளென்க எனின் $E(X + Y) = E(X) + E(Y)$

(iv) $X_1, \ldots, X_n$ என்னும் எழுமாற்று மாறிகளை எடுத்துக் கொள்க. எனின், $E(X_1 + \ldots + X_n) = E(X_1) + \ldots + (X_n)$ இதிலிருந்து,

$E(a_1 X_1 + \ldots + a_n X_n) = a_1 E(X_1) + \ldots + a_n F(X_n)$

இங்கு $a_1, \ldots, a_n$ ஒருமைகள்.

(v) (X, Y) என்பது ஓர் இரு பரிமாண எழுமாற்று மாறியும், X, Y என்பன ஒன்றை ஒன்று சாராதவையுமெனின், $E(XY) = E(X) \cdot E(Y)$

4.9: எழுமாற்று மாறியின் மாறற்றிறன்

(The Variance of a Random Variable)

மாறிகள் குறிப்பிட்ட பெறுமானத்தைச் சராசரியாகக் கொண்டிருக்கின்றன என்பதுடன், மாறி எடுக்கும் பெறுமானங்கள் சராசரிப் பெறுமானத்திலிருந்து எவ்வாறு பரந்திருக்கின்றன அல்லது விலகியிருக்கின்றன என்பதும் அறியப்படல் வேண்டும்; இப்பேர்ப்பட்ட நிலைமைகளுக்கு ஒரு மதிப்பினைக் கீழே வரையறுப்போம்;

யாதுமொரு எழுமாற்று மாறி X இனது மாறற்றிறன் (*variance*) ஆனது $Var(X)$ அல்லது $V(X)$ இனற் குறிப்பிடப்பட்டு,

$V(X) = E\left[X - E(X)\right]^2$ என வரையறுக்கப்படும்.

$V(X)$ இன் வர்க்க மூலத்தினது நேர்ப் பெறுமானம் X இனது நியமவிலகல் எனப்படும். இது வழமையாக σ(*Sigma*) இனால் குறிப்பிடப்படும்.

பின்வரும் முடிபிலிருந்து $V(X)$ இனை இலகுவாகக் கணிக்க முடியும்.

$$V(X) = E(X^2) - \left[E(X)\right]^2$$

மாறற்றிறனது உடைமைகள்

(*i*) $V(c) = o$

$V(X + c) = V(X)$; இங்கு c ஓர் ஒருமை

(*ii*) X ஓர் எழுமாற்றுமாறியும், a, b, c ஒருமைகளுமெனின்

$V(cX) \quad = c^2 V(X)$

$V(aX + b) = a^2 V(X)$

(*iii*) (X, Y) என்பது யாதுமோர் இரு பரிமாண எழுமாற்று மாறியும் X, Y என்பன ஒன்றையொன்று சாராதவையுமெனின்,

$V(X \pm Y) = V(X) + V(Y)$

(*iv*) $X_1, X_2, \ldots\ldots\ldots, X_n$ என்பன n ஒன்றையொன்று சாராத எழுமாற்று மாறிகளெனக. எனின்

$V(X_1 + X_2 + \ldots + X_n) = V(X_1) + V(X_2) + \ldots + V(X_n)$

4.10: இணைமாறற்றிறன் (Covariance)

X, Y என்பன மாதிரிவெளி S மீது வரையறுக்கப்பட்ட ஈர் எழுமாற்று மாறிகள் என்க. $E(X) = \bar{X}$, $E(Y) = \bar{Y}$ எனின் X, Y இனது இணைமாறற்றிறன் cov (X, Y) இனால் குறிக்கப்பட்டு,

$cov(X, Y) = E\left[(X - \bar{X})(Y - \bar{Y})\right]$ என வரையறுக்கப்படும். X, Y பின்னக எழுமாற்று மாறிகளெனின்

$$cov(X, Y) = \sum_{ij} (x_i - \bar{X})(y_j - \bar{Y})\, p(x_i, y_j)$$

X, Y தொடர்ச்சியுள்ள எழுமாற்று மாறிகளெனின்

$$cov(X, Y) = \int_{-\infty}^{\infty}\int_{-\infty}^{\infty} (x - \bar{X})(y - \bar{Y})\, f(x, y)\, dx\, dy$$

இணைமாறற்றிறனது உடைமைகள்

(i) இணைமாறற்றிறன் பரிவர்த்தனைத் தன்மையுடையது அதாவது $cov\ (X, Y) = cov\ (Y, X)$

(ii) எழுமாற்று மாறியொன்றிற்கும் ஒரு மாறிலிக்குமிடையிலான இணைமாறற்றிறன்பூச்சியம். $cov(X, c) = 0; c$ — மாறிலி

(iii) ஈர் எழுமாற்று மாறிகளின் இணைமாறற்றிறன் மாறிகளுடன் சில மாறிலிகளைச் சேர்த்துக் கொள்வதனுல் மாற்றமடையாது. அதாவது,
$cov\ (X + a, Y + b) = cov(X, Y); a, b$ ஒருமைகள்

(vi) ஆனுல் எழுமாற்று மாறிகளை ஒருமையினுல் பெருக்கின்
$cov\ (a X, b Y) = a\, b\ cov\ (X, Y)$

(v) இணைமாறற்றிறனுக்கான கூட்டல்விதி
$cov\ (X + Y, Z) = cov\ (X, Z) + cov\ (Y, Z)$

(vi) $cov(X, X) = V(X)$

5. நிகழ்தகவுப் பரம்பல்கள்

(Probability Distributions)

மாறியொன்று ஏற்கும் பெறுமானங்களை அவற்றிற் கொத்த நிகழ்தகவுகளுடன் கொண்ட ஓர் அட்டவணை அல்லது தொடை அம்மாறியினது நிகழ்தகவுப் பரம்பல் எனப்படும். பல வேளைகளில் மாறிகள் தனிப் பெறுமானங்களை எடுப்பதற்குரிய நிகழ்தகவுகளைவிட அவற்றின் நிகழ்தகவுப் பரம்பல்களே அதி முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

பின்னக நிகழ்தகவுப் பரம்பல்கள்

பேனுாயி முயல்புகள் (Bernoulli's Trials)

மீண்டும் மீண்டும் நடைபெறும் சாரா முயல்புகள் ஒவ்வொன்றிற்கும் இரு விளைவுகள் மாத்திரமே உளவாகவும் இவ்விளைவுகள் மாரு நிகழ்தகவுகளைக் கொண்டனவாகவுமிருப்பின் அம்முயல்புகள் பேனுாயி முயல்புகள் எனப்படும்.

5·1: ஈருறுப்புப் பரம்பல் (Binomial Distribution)

n சாரா பேனுாயி முயல்புகளின்போது பெறப்படும் வெற்றிகளின் எண்ணிக்கையை X என்னுமொரு பின்னக எழுமாற்று மாறி குறிக்கின்றதென்க.

X இனது நிகழ்தகவுச் சார்பு.

$$p(x) = \binom{n}{x} p^{x} q^{n-x}; \; x = o, 1, \dots, n; \; q = 1 - p$$

என்பதாலே தரப்படின் X ஆனது n, p பரமானங்களைக் கொண்டு ஈருறுப்பாகப் பரம்பப்பட்டிருக்கும்;

$X \sim B(n, p)$ எனின்,

(i) $E(X) = np$

(ii) $V(X) = npq$

(iii) $p(x+1) = \dfrac{(n-x)}{(x+1)} \; \dfrac{p}{q} \; p(x)$

5·2: புவசோன் பரம்பல் (Poisson Distribution)

X என்னுமொரு பின்னக எழுமாற்று மாறி $0, 1, 2, \dots, n, \dots$ என்னும் பெறுமானங்களை எடுக்கின்றதாகக் கொள்க; X இனது நிகழ்தகவுச் சார்பு,

$$p(x) = \frac{e^{-\lambda} \lambda^{x}}{x!}; \; x = o, 1, \dots, n, \dots$$

இங்கு $\lambda = np, \; e = 2{\cdot}7183$

என்பதாலே தரப்படின் X ஆனது λ பரமானத்தை உடைய புவசோன் பரம்பலைக் கொண்டிருக்கும்.

$X \sim P(\lambda)$ எனின்,

(i) $E(X) = \lambda$

(ii) $V(X) = \lambda$

(iii) $P(x+1) = \dfrac{\lambda}{(x+1)} \; p(x)$

தொடர்ச்சி நிகழ்தகவுப் பரம்பல்

5 3: செவ்வன் பரம்பல் (Normal Distribution)

ஓர் எழுமாற்று மாறி X ஆனது $-\infty$ இலிருந்து $+\infty$ வரையிலுள்ள எல்லா மெய்ப் பெறுமானங்களையும் எடுக்கின்றதென்க;

X இனது நிகழ்தகவு அடர்த்திச் சார்பு,

$$f(x) = \frac{1}{\sigma\sqrt{2\pi}} e^{-\frac{1}{2}\left(\frac{x-\mu}{\sigma}\right)^2}$$

என்பதாலே தரப்படின் X ஆனது μ, σ^2 பரமானங்களைக் கொண்டு செவ்வனகப் பரம்பப்பட்டிருக்கும்.

$X \sim N(\mu, \sigma^2)$ எனின்,

(i) $E(X) = \mu$

(ii) $V(X) = \sigma^2$

பொதுவாக செவ்வன் வளையியின் அமைப்பு சமச் சீரானதாகவே காணப்படும். அதாவது, வளையியானது நிலைக்குத் அச்சிற்குச் சமாந்தரமான கோடு பற்றி மடிக்கப்படின் அதன் இரு பாதிகளும் ஒன்றின்மேல் ஒன்று மேற்படிவதைக் காண முடியும். அத்துடன் வளையி உள்ளடக்கும் பரப்பு மொத்த நிகழ்தகவு 1 இற்குச் சமனாகும்.



(அ) நியமச் செவ்வன் பரம்பல்
(Standard Normal Distribution)

Z என்னும் ஓர் எழுமாற்று மாறியினது நிகழ்தகவு அடர்த்திச் சார்பு

$$\phi(z) = \frac{1}{\sqrt{2\pi}} e^{-\frac{z^2}{2}}$$

என்பதாலே தரப்படின், Z ஆனது பூச்சியத்தினை இடையாகவும், ஒன்றினை நியம விலகலாகவும் கொண்டு நியமச் செவ்வனாகப் பரம்பப்பட்டுள்ளது எனப்படும்.

அதாவது $Z \sim N(0, 1)$

இங்கு Z ஆனது நியம செவ்வன் மாறி (Standard Normal Variable) எனப்படும்.

எந்த ஒரு மாறியையும், அதிலிருந்து அதன் இடையினைக் கழித்து வருவதை நியமவிலகலால் பிரிப்பதன் மூலம் ஒரு நியம செவ்வன் மாறியாக மாற்றலாம்.

அதாவது $Z = \dfrac{X - \mu}{\sigma}$

எனவே $X \sim N(\mu, \sigma^2)$ எனின்,

$$P(a \leq X \leq b) = P\left(\frac{a-\mu}{\sigma} \leq Z \leq \frac{b-\mu}{\sigma}\right)$$





உதாரணமாக,

$$\begin{aligned} P(\mu - \sigma \leq X \leq \mu + \sigma) &= P(-1 \leq Z \leq 1) \\ &= 2P(0 \leq Z \leq 1) \\ &= 0{\cdot}6826 \end{aligned}$$



$$\begin{aligned} P(\mu - 2\sigma \leq X \leq \mu + 2\sigma) &= P(-2 \leq Z \leq 2) \\ &= 2P(0 \leq Z \leq 2) \\ &= 0{\cdot}9544 \end{aligned}$$



$P(\mu - 3\sigma \leq X \leq \mu + 3\sigma)$



$$= P(-3 \leq Z \leq 3)$$
$$= 2P(0 \leq Z \leq 3)$$
$$= 0{\cdot}9972$$

மேலும் Z ஆனது $-\infty$ இலிருந்து $+\infty$ வரையுள்ள எல்லாப் பெறுமானங்களையும் ஏற்கும்.

அத்துடன் $P(-\infty \leq Z \leq +\infty) = 1$



மேலுள்ள படத்திலிருந்து 68·26 வீதயான தரவுகள் [z=−1, z=1] என்ற ஆயிடையினுள்ளும், 95·44 வீதமான தரவுகள் [−2, 2] என்ற ஆயிடையினுள்ளும், 99·72 வீதமானவை [−3, 3] என்ற ஆயிடையினுள்ளும் இருப்பதைக் காணமுடிகின்றது. இதேபோல எத்தனைவிதமான தரவுகள் மாறி Z இன் குறிப்பிட்ட ஆயிடையொன்றினுள் காணப்படுகின்றன என்பதனையும் அறிய முடிகின்றது.

(ஆ) ஈருறுப்புப் பரம்பலுக்குச் செவ்வன் அண்ணளவாக்கம்

எழுமாற்று மாறி X ஆனது n, p பரமானங்களைக் கொண்டு ஈருறுப்பாகப் பரம்பப்பட்டுள்ளதென்க.

எனின், $Z = \dfrac{X - np \pm \frac{1}{2}}{\sqrt{npq}}$ ஆனது

n இனது பெரிய பெறுமானத்திற்கு அண்ணளவாக நியமச் செவ்வன் பரம்பலைக் கொண்டிருக்கும்.

புள்ளியியல் அனுமானம் (Statistical Inference)

குடியொன்றின் வகை மாதிரியை ஆராய்ந்து அதிலிருந்து குடி பற்றிய முக்கியமான முடிபுகளை அனுமானிக்கக்கூடிய அனுமானம் என்ன நிபந்தனைகளின்கீழ் ஒப்புக்கொள்ளக்கூடியது என்று ஆராயப் படும் புள்ளிவிபரவியற் பகுதி 'தொகுத்தறி புள்ளிவிபரவியல்' அல்லது 'புள்ளியியல் அனுமானம்' எனப்படும்.

6. மாதிரியெடுப்புப் பரம்பல்கள் (Sampling Distributions)

நடைமுறையில் ஒரு முழுத் தொகுதியின் குணதிசயங்களைப் பற்றி அறிவதற்கு அதன் ஒவ்வோர் உறுப்பையும் பரிசீலனை செய்து முடிவுக்கு வருவது இயலாத காரியம். மாறாக, தரப்பட்ட தரவுகள் முழுத் தொகுதியொன்றின் (குடி) வகை மாதிரியாயின் குடி பற்றிய முக்கிய முடிபுகளை அம் மாதிரியை ஆராய்வதால் அனுமானிக்க முடியும். மாதிரித் தரவுகளிலிருந்து ஒத்த குடிப்பரமானங்களை மதிப்பிடவோ அன்றி ஒத்த குடி பற்றிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய தேவையோ காணப்படுகின்றது. இதற்கு, மாதிரித் தரவுகளின் பரம்பல்கள் வேண்டப்படுகின்றன. மாதிரியெடுப்புப் பரம்பல்கள் பற்றிய ஆய்விலிருந்து மாதிரித் தரவுகள் பற்றிய செய்திகளைப் பெறமுடிகின்றது.

குடி (Population)

சோதனையின் கீழுள்ள எல்லா மூலகங்களையும் கொண்டுள்ள தொடை அல்லது தொகுதி குடி எனப்படும். இதிலுள்ள மூலகங்கள் சிலவற்றின் சேர்க்கை மாதிரி (sample) எனப்படும்.



பரமானம் (Parameter)

குடிப் பரம்பலொன்றின் சிறப்பியல்புகளை விபரிக்கும் அளவைகள் அப்பரம்பலின் பரமானங்கள் எனப்படும். உதாரணமாக, குடியிடை (μ), குடி மாறற்றிறன் (σ^2), குடிவிகிதசமம் (π),... போன்றவை.

எழுமாற்று மாதிரி (Random Sample)

எழுமாற்று மாறி X என்பது குறிப்பிட்ட ஒரு நிகழ்தகவுப் பரம்பலைக் கொண்டுள்ளதென்க. $X_1, X_2, \ldots\ldots, X_n$ என்னும் n எழுமாற்று

மாறிகளின் பரம்பல்கள் X இனது பரம்பலுக்கு ஒத்தாயின், (X_1, X_2,……,X_n) என்பது எழுமாற்று மாறி X இலிருந்து எடுக்கப்பட்ட ஓர் எழுமாற்று மாதிரி எனப்படும்.

புள்ளிவிபரம் (Statistic)

மாதிரிப் பரம்பலொன்றின் சிறப்பியல்புகளை விபரிக்கும் அளவை ஒவ்வொன்றும் அப்பரம்பலின் புள்ளிவிபரம் எனப்படும்.

உதாரணமாக, மாதிரியிடை ($\overline{X}$), மாதிரி மாறற்றிறன் (S^2), மாதிரி விகிதசமம் (p),……… போன்றவை.

புள்ளிவிபரமானது மாதிரித் தரவுகளிலிருந்து கணிக்கப்படுவதால் அதுவும் ஓர் எழுமாற்று மாறியாகும்.

நியம வழு (Standard Error)

புள்ளிவிபரம் ஒன்றின் நியம விலகலானது அதன் நியம வழு எனப்படும்.

6.1: மாதிரியிடை $\overline{X}$ இனது பரம்பல்

தேற்றம் 6.1

எழுமாற்று மாறி X ஆனது μ இனை இடையாகவும் σ^2 ஐ மாறற்றிறனாகவும் கொண்டு செவ்வனாகப் பரம்பப்பட்டுள்ளதென்க. இதிலிருந்து n பருமன் கொண்ட மாதிரி எடுக்கப்படின், மாதிரியிடை $\overline{X}$ ஆனது μ இனை இடையாகவும், σ^2/n இனை மாறற்றிறனாகவும் கொண்டு செவ்வனாகப் பரம்பப்பட்டிருக்கும்.

அதாவது,

$X \sim N(\mu, \sigma^2)$ எனின்

$\overline{X} \sim N\left(\mu, \dfrac{\sigma^2}{n}\right)$,



குறிப்பு :

மாதிரி எடுக்கப்படும் குடி முடிவானதாயின் (finite population) மாதிரியிடையினது மாறற்றிறனில் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

இங்கு $\overline{X} \sim N\left[\mu, \dfrac{\sigma^2}{n}\left(\dfrac{N-n}{N-1}\right)\right]$

மைய எல்லைத் தேற்றம் (The Central Limit Theorem)

$X_1, X_2, \ldots\ldots, X_n$ என்னும் தொடரியிலுள்ள சாரா எழுமாற்று மாறிகளை எடுத்துக் கொள்க, இங்கு,

$$E(X_i) = \mu_i, \quad V(X_i) = \sigma_i^2; \quad i = 1, 2, \ldots\ldots$$

$X = X_1 + X_2 + \ldots\ldots + X_n$ எனின், பொதுவான சில நிபந்தனைகளின் கீழும், n இனது போதியளவு பெரிய பெறுமானத்திற்கும்,

$Z = \dfrac{X - \Sigma\mu_i}{\sqrt{\Sigma\sigma_i^2}}$ ஆனது அண்ணளவாக நியமச் செவ்வன் பரம்பலைக் கொண்டிருக்கும்.

வேறொரு வடிவம்

எல்லா i இற்கும் $X_i \sim N(\mu, \sigma^2)$ எனின்,

$$Z = \frac{\bar{X} - \mu}{\sigma / \sqrt{n}} \sim N(0, 1)$$

தேற்றம் 6·2 ($n < 30$ கொண்ட சிறிய மாதிரிகளுக்கு)

எழுமாற்று மாதிரி $(X_1, X_2, \ldots\ldots, X_n)$ ஆனது இடை μ உம், தெரியாத மாறற்றிறன் σ^2 உம் கொண்ட ஒரு செவ்வன் குடியிலிருந்து எடுக்கப்படுகின்றதென்க. $\bar{X}$, S^2 என்பன முறையே மாதிரியிடையையும், மாதிரி மாறற்றிறனையும் குறிப்பின், t ஆனது $t = \dfrac{\bar{X} - \mu}{S/\sqrt{n}}$ என வரையறுக்கப்பட்டு $(n-1)$ சுயாதீனப் படிகளைக்கொண்ட 't' பரம்பலைக் கொண்டிருக்கும்.

இங்கு $S^2 = \Sigma(x - \bar{X})^2 / (n-1)$

6 3: இரு மாதியிடைகளின் வித்தியாசம் $\bar{X}_1 - \bar{X}_2$ இனது பரம்பல்

தேற்றம் 6·3:

$\bar{X}_1$, $\bar{X}_2$ என்பன முறையே $N(\mu_1, \sigma_1^2)$, $N(\mu_2, \sigma_2^2)$ என்னும் செவ்வன் குடிகளிலிருந்து எடுக்கப்பட்ட n_1, n_2 என்னும் பருமன்கள் கொண்ட இரு சாரா எழுமாற்று மாதிரிகளின் இடைகள் என்க. எனின்,

$$\bar{X}_1 - \bar{X}_2 \sim N\left[(\mu_1 - \mu_2), \left(\frac{\sigma_1^2}{n_1} + \frac{\sigma_2^2}{n_2}\right)\right]$$

தேற்றம் 6·4 (σ_1^2, σ_2^2 என்பன தெரியாக்கணியங்கள் ஆனால் சமமானவை)

μ_1, μ_2 இனை இடைகளாகவும், σ_1^2, σ_2^2 இனை மாறற்றிறன்களாகவும் கொண்ட இரு செவ்வன் குடிகளிலிருந்து முறையே n_1, n_2 பருமன்கள் கொண்ட இரு சாரா எழுமாற்று மாதிரிகள் எடுக்கப்படுகின்றன என்க. அவற்றின் மாதிரியிடைகள் முறையே $\bar{X}_1$, $\bar{X}_2$ உம், மாதிரி மாறற்றிறன்கள் முறையே S_1^2, S_2^2 உம் எனின்,

$$\frac{(\bar{X}_1 - \bar{X}_2) - (\mu_1 - \mu_2)}{\sqrt{\frac{(n_1 - 1) S_1^2 + (n_2 - 1) S_2^2}{n_1 + n_2 - 2}} \sqrt{\frac{1}{n_1} + \frac{1}{n_2}}} \sim t_{n_1 + n_2 - 2}$$

இங்கு சுயாதீனப் படிகள் $(n_1 + n_2 - 2)$

தேற்றம் 6·5 (σ_1^2, σ_2^2 என்பன சமமல்லாத தெரியாக்கணியங்கள்)

இங்கு $$\frac{(\bar{X}_1 - \bar{X}_2) - (\mu_1 - \mu_2)}{\sqrt{\frac{S_1^2}{n_1} + \frac{S_2^2}{n_2}}} \simeq t_v$$

சுயாதீனப்படிகளின் எண்ணிக்கை $$v = \frac{(S_1^2/n_1 + S_2^2/n_2)^2}{\frac{(S_1^2/n_2)^2}{n_1 + 1} + \frac{(S_2^2/n_2)^2}{n_2 + 1}} - 2$$

6·3: மாதிரி மாறற்றிறன் S^2 இனது பரம்பல்

தேற்றம் 6·6

எழுமாற்று மாதிரி $(X_1, X_2, \ldots, X_n)$ ஆனது, இடை μ உம், மாறற்றிறன் σ^2 உம் கொண்ட ஒரு செவ்வன் குடியிலிருந்து எடுக்கப்படுகின்றதென்க. $\bar{X}$, S^2 என்பன முறையே மாதிரியிடை, மாதிரி மாறற்றிறன் எனின்,

$$\frac{(n-1) S^2}{\sigma^2} \sim \chi^2_{n-1}$$

இங்கு சுயாதீனப் படிகள் $(n - 1)$

6·4: மாதிரி விகிதசமம் p இனது பரம்பல்

தேற்றம் 6·7

π விகித வெற்றிகளையுடைய (ஒரு வெற்றிக்கான நிகழ்தகவு π) ஓர் ஈருறுப்புக் குடியிலிருந்து *(Binomial Population)* n பருமன்

கொண்ட எழுமாற்று மாதிரி எடுக்கப்படுகின்றதென்க. n இனது பெரிய பெறுமானத்திற்கு மாதிரி விகிதசமம் $p\ (=x/n)$ ஆனது அண்ணளவாகப் பின்வரும் செவ்வன் பரம்பலைக் கொண்டிருக்கும்.

$$p \simeq N\left[\pi, \frac{\pi(1-\pi)}{n}\right]$$

6·5: இரு மாதிரி விகிதசமங்களின் வித்தியாசம் $p_1 - p_2$ இனது பரம்பல்

தேற்றம் 6·8

π_1, π_2 விகித வெற்றிகளையுடைய இரு ஈறுப்புக் குடிகளிலிருந்து முறையே n_1, n_2 பருமன்களைக் கொண்ட இரு சாரா எழுமாற்று மாதிரிகள் எடுக்கப்படுகின்றதென்க. அவற்றின் மாதிரி விகிதசமங்கள் முறையே p_1, p_2 எனின், n_1, n_2 இனது போதியளவு பெரிய பெறுமானங்களுக்கு,

$$p_1 - p_2 \simeq N\left[(\pi_1 - \pi_2), \frac{\pi_1(1-\pi_1)}{n_1} + \frac{\pi_2(1-\pi_2)}{n_2}\right]$$

குறிப்பு: மாதிரிப் பருமன் 100 இனை விடப் பெரிதாக இருப்பின் குடி விகிதசமத்தின் மதிப்பாளுக மாதிரி விகிதசமம் பயன் படுத்தப்படலாம்.

7. பரமானங்களின் மதிப்பீடு (Estimation of Parameters)

எல்லா வேளைகளிலும் குடி பற்றிய தகவல்கள் அல்லது முடிபுகள் எமக்குக் கிடைப்பதில்லை. இச்சந்தர்ப்பங்களிளெல்லாம் மாதிரித் தரவுகளிலிருந்தே ஒத்த குடிப்பரமானங்கள் மதிப்பிடப்படுகின்றன. அதாவது, புள்ளிவிபரங்களே ஒத்த குடிப்பரமானங்களின் மதிப்பான்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய அனுமானம் முற்ருய் உறுதியாயிருக்கமுடியாது என்பதால், முடிபுகள் நிகழ்தகவுகளுடன் இணைத்தே கூறப்படுகின்றன.

புள்ளி மதிப்பு (Point Estimate)

குடிப் பரமானம் ஒன்றின் மதிப்பினை ஒன்றி எண்ணிற் குறிப்பிடுவோமாகில் அது அப் பரமானத்தின் ஒரு புள்ளி மதிப்பு எனப்படும்.

கோடலற்ற மதிப்பு (Unbiased Estimate)

குடிப் பரமானம் ஒன்றின் மதிப்பினது எதிர்வு, ஒத்த அப் பரமானத்திற்குச் சமனுயின் அம் மதிப்பு குறிப்பிட்ட பரமானத்தின் ஒரு கோடலற்ற மதிப்பு எனப்படும்.

அதாவது, $E(\hat{\theta}) = \theta$ எனின், $\hat{\theta}$ ஆனது பரமானம் θ இன் ஒரு கோடலற்ற மதிப்பு ஆகும்.

உதாரணமாக, $E(\overline{X}) = \mu$ ஆகையால் மாதிரியிடை குடியிடையினது ஒரு கோடலற்ற மதிப்பான் ஆகும்.

திறமையான மதிப்பு (Efficient Estimate)

குடிப்பரமானமொன்றின் பல கோடலற்ற மதிப்புக்கள் தரப்படின், அவற்றுள் குறைந்த மாறற்றிறனைக் கொண்ட மதிப்பு, மற்றையவற்றுடன் ஒப்பிடுமிடத்து திறமையான மதிப்பு எனப்படும்.

ஆயிடை மதிப்பு (Interval Estimate)

குடிப் பரமானம் ஒன்று, இரு வேறு பெறுமானங்களுக்கிடையே கிடக்கின்றதாகக் கொள்வோமாகில் அப்பரமானத்தின் மதிப்பு ஓர் ஆயிடை மதிப்பு எனப்படும்.

7·1: நம்பிக்கை ஆயிடைகள் (Confidence Intervals)

$\theta_L(x_1, x_2, \ldots\ldots\ldots, x_n)$, $\theta_H(x_1, x_2, \ldots\ldots, x_n)$ என்னுமிரு புள்ளிவிபரங்கள் $P(\theta_L < \theta < \theta_H) = 1 - \alpha$ ஆகுமாறு காணப்படின், எழுமாற்று ஆயிடை (θ_L, θ_H) ஆனது பரமானம் θ இனது $100(1-\alpha)\%$ நம்பிக்கை ஆயிடை எனப்படும். இங்கு α ஓர் ஒருமை.

மேலும், (θ_L, θ_H) ஆனது பரமானம் θ இன் ஓர் **ஆயிடை மதிப்பான்** (Interval Estimator) எனவும்,

நம்பிக்கை ஆயிடையின் முடிவுப் புள்ளிகள் θ_L, θ_H என்பன θ இனது $100(1-\alpha)\%$ **நம்பிக்கை எல்லைகள்** (*Confidence Limits*) எனவும்,

$(1-\alpha)$ ஆனது **நம்பிக்கைக் குணகம்** (*Confidence Coefficient*) எனவும் அழைக்கப்படும்.

7.2: சில முக்கிய குடிப் பரமானங்களுக்கான $100(1-\alpha)\%$ நம்பிக்கை ஆயிடைகள்

(அ) செவ்வன் குடியொன்றின் இடை μ இற்கான நம்பிக்கை ஆயிடை

(i) σ^2 தெரியப்படின்

$$\left[\bar{X} \pm Z\alpha/2 \ \frac{\sigma}{\sqrt{n}}\right]$$

அதாவது. $P\left(\bar{X} - Z_{\alpha/2}\frac{\sigma}{\sqrt{n}} \leqslant \mu \leqslant \bar{X} + Z_{\alpha/2}\frac{\sigma}{\sqrt{n}}\right) = 1-\alpha$

இங்கு எழுமாற்று ஆயிடை $\left(\bar{X} - Z_{\alpha/2}\frac{\sigma}{\sqrt{n}}, \bar{X} + Z_{\alpha/2}\frac{\sigma}{\sqrt{n}}\right)$

ஆனது μ இனைக் கொண்டிருப்பதற்கான நிகழ்தகவு $(1-\alpha)$ ஆகும். அதாவது $100(1-\alpha)\%$ ஆயிடைகள் μ இனைக் கொண்டிருக்கும்.

(ii) σ^2 தெரியப்படாவிடின்,

$$\left[\bar{X} \pm t_{(n-1), \alpha/2} \ \frac{S}{\sqrt{n}}\right]$$

(ஆ) இரு செவ்வன் குடியிடைகளின் வித்தியாசம் $\mu_1 - \mu_2$ இற்கான நம்பிக்கை ஆயிடை

(i) σ_1^2, σ_2^2 தெரியப்படின்,

$$\left[(\bar{X}_1 - \bar{X}_2) \pm Z_{\alpha/2} \sqrt{\frac{\sigma_1^2}{n_1} + \frac{\sigma_2^2}{n_2}}\right]$$

(ii) σ_1^2, σ_2^2 தெரியாக் கணியங்கள் ஆனால் சமனானவை,

$$\left[(\bar{X}_1 - \bar{X}_2) \pm t_{(n_1+n_2-2), \alpha/2} \sqrt{\frac{(n_1-1)S_1^2 + (n_2-1)S_2^2}{n_1+n_2-2}} \sqrt{\frac{1}{n_1} + \frac{1}{n_2}}\right]$$

(iii) σ_1^2, σ_2^2 சமமல்லாத தெரியாக் கணியங்கள்,

